# தமிழ்த்துறை செயல்பாடுகள்
# 2016-2017

**21.06.2106** அன்று தமிழ்த்துறை சார்பில் விழிப்புணர்வு யோகா கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

**13.07.2016** அன்று முத்தமிழ் மன்ற தொடக்க விழா நடைபெற்றது அவற்றில் முனைவர் **ந. பாஸ்கரன்** பேராசிரியர், தமிழ்த்துறை, பெரியார் அரசு கலைக்கல்லூரி, கடலூர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

**17.07.2016** அன்று **திருப்பாதிரிப்புலியூர் சைவநெறி மன்றம்** நடத்திய பேச்சுப்போட்டியில் **சி. சரண்யா** இரண்டாம் ஆண்டு ‘அ’ பிரிவு வணிகவியல் மாணவி **முதல் பரிசு** பெற்றார்.

**31.07.2016** அன்று **சீராம் இலக்கியக் கழகம்** நடத்திய பேச்சுப்போட்டியில் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**01.08.2016** அன்று **விவேகானந்த கேந்திரம் கன்னியாகுமரி** நடத்தும் மாநில அளவிலான புத்தக திறனாய்வுப் போட்டியில் 102 மாணவர்கள் கலந்துகொண்டு சான்றிதழ் பெற்றுள்ளனர்.

**07.08.2016** அன்று **இராமலிங்கர் பணிமன்றம்** சார்பில் விழுப்புரத்தில் நடைபெற்ற கலை இலக்கியப் போட்டிகளில் மாணவர்கள் பங்கு பெற்றனர். அவற்றில் பேச்சுப்போட்டியில் **ஜே. விஜய்** மூன்றாம் ஆண்டு இயற்பியல் மாணவன் மண்டல அளவில் **முதல் இடத்தில் தேர்ச்சிப் பெற்று 5000 ரூபாய் வென்றார்.**

**08.08.2016** அன்று **விடியல் கலை இலக்கிய மன்றம் மதுரையில்** நடைபெற்ற கலை இலக்கிய போட்டிகளில் 30 மாணவர்களின் படைப்புகள் அனுப்பி வைக்கப்பட்டது. மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் அளிக்கப்பட்டது.

**10.08.2016** அன்று **தெய்வ நெறி கழகம் மதுரை** சார்பில் நடைபெற்ற கவிதை, கட்டுரை போட்டிகளுக்கு தலா 5 மாணவர்களின் படைப்புகள் அனுப்பி வைக்கப்பட்டது.

**20.08.2016** அன்று **அகத்திய மாமுனிவர் கலை இலக்கியப் பண்பாட்டு ஆய்வு மையம்** நடத்திய மாபெரும் கலைப் போட்களில் 28 மாணவர்களின் படைப்புகள் அனுப்பப்பட்டு பாராட்டுச் சான்றிதழ் பெற்றனர்.

**23.08.2016** அன்று தமிழ்த்துறை சார்பில் தமிழ் **பேச்சுப் பயிற்சிப் பட்டறை** நடைபெற்றது. கவிஞர் **திரு.சத்திய மோகன்** நெய்வேலி என் .எல். சி உதவிப் பொறியாளர் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

**25.08.2016** அன்று **கவியரசர் கலைத் தமிழ்ச் சங்கம்** சார்பில் 70வதாவது சுதந்திர தின விழா- மாநில அளவிலான கவிதை, கட்டுரை, ஓவியப் போட்டிகளில் 14 மாணவர்களின் படைப்புகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**08.09.2016** அன்று **கடலூர் சென்ட்ரல் ரோட்டரி சங்கம், கடலூர் மாவட்ட பார்வை இழப்ப தடுப்பு சங்கம்** சார்பில் நடைபெற்ற 31 வது கண் தானம் என்ற தலைப்பில் மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்துக்கொண்டனர் அவற்றில் பேச்சு-**ஜா. விஜய்** மூன்றாம் ஆண்டு இயற்பியல் மாணவனும், சி. **சரண்யா** இரண்டாம் ஆண்டு வணிகவியல் மாணவியும் **முதல் பரிசினையும்**, கவிதை- **அன்பரசி** இரண்டாம் ஆண்டு ஆங்கிலத்துறை மாணவி **முதல் பரிசினையும்** பெற்றனர்.

**21.09.2016** அன்று **தமிழ்த்துறை சார்பில் கவியரங்கம்** காலை 11.15 மணிக்கும் மாலை 2.15 மணிக்கும் **முனைவர் ச. மகாவிஷ்ணு** உதவி பேராசிரியர், தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, விழுப்புரம். அவர்கள் மாணவர்கள் வாசித்த கவிதைக்கு விமர்சனம் கூற கவியரங்கம் இனிதே நடைப்பெற்றது.

**24.09.2016** அன்று **இராமலிங்கர் பணிமன்றம்** சார்பில் நடைப்பெற்ற மாநில அளவிலான பேச்சுப்போட்டியில் **ஜே. விஜய்** மூன்றாம் ஆண்டு இயற்பியல் மாணவன் சான்றிதழ் பெற்றுள்ளார்.

**30.09.2016** அன்று நன்னூல் இலக்கணத்தின் எளிமையைப் பற்றி முனைவர் **திருநாவுக்கரசர்** அவர்கள் தமிழ்த்துறை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

**25.10.2016** அன்று **உலக திருக்குறள் பேரவை** சார்பில் நடைப்பெற்ற கட்டுரைப் போட்டியில் 3 மாணவர்களின் படைப்புகள் அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றில் இரண்டாம் ஆண்டு நுண்ணுயிரியல் மாணவி **லாவண்யா ரூ. 500 பரிசு** பெற்றார்.

**15.11.2016** அன்று **63 அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா** கொண்டாட்டத்தில் **கட்டுரைப் போட்டியில் க. கங்காபாய்** மூன்றாம் ஆண்டு உயிர் வேதியல் மாணவி **இரண்டாம் பரிசும்**, **பேச்சுபப் போட்டியில் ஜா. விஜய்** மூன்றாம் ஆண்டு மாணவர் **இரண்டாம் பரிசும்** பெற்றுள்ளனர்.

**23. 12. 2016** அன்று **தமிழ் வளர்ச்சித்துறை** மாவட்டட அளவில் கல்லூரியில் பயிலும் மாணவர்களிடையே கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளை நடத்தியது. இதில் கல்லூரி சார்பாக மாணவ மாணவியர் பங்கேற்று வெற்றி பெற்றனர். **கவிதைப்போட்டியில் ஜெ. விஜய்** மூன்றாம் ஆண்டு இயற்பியல் மாணவன் **முதலிடம் பெற்று 10000 ருபாய்** பெற்றுள்ளார். **பேச்சுப்போட்டியில் ச. சரண்யா** மூன்றாம் ஆண்டு வணிகவியல் துறையை சார்ந்த மாணவி **இரண்டாம் இடம் பெற்று 7000 ருபாய்** பெற்றுள்ளார்.

**07.01.2017** அன்று தமிழ்த்துறை சார்பாக **"முப்பெரும் கவிஞர்களின் பார்வையில் தமிழ்"** என்ற பொருளில் **தேசிய கருத்தரங்கம்** நடைப்பெற்றது. அவற்றில் செயலர் தந்தை ஜா. பீட்டர் ராஜேந்திரம் அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக ஆ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரியிலிருந்து **முனைவர். நா.சிவாஜி கபிலன்** இணைப்பேராசியர் அவர்களும், புதுச்சேரி தாகூர் கலைக்கல்லூரி நற்றமிழ் நாவர் **முனைவர். நா. இளங்கோ** அவர்களும், பெரியார் அரசு கலைக்கல்லூரி உதவிப்பேராசிரியர் **முனைவர் ந. பாஸ்கரன்** அவர்களும், அதே கல்லூரியை சார்ந்த உதவிப்பேராசிரியர் முனைவர் பன்னீர்செல்வம் அவர்களும் சிறப்புரையாற்றினர்.

**23.01.2017** அன்று மாநில அளவிலான மாபெரும் கலைப்போட்டிகள் கவிஞன் பதிப்பகம் சார்பில் வள்ளியூரில் நடைப்பெற்றது. அவற்றிற்கு நம் கல்லூரி சார்பாக 15 மாணவர்களின் படைப்புகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**25.02.2017** அன்று மாவட்ட அளவில் சேக்கிழார் ஆராய்ச்சி மையம் , சென்னை சார்பில் பேச்சுப் போட்டி நடைப்பெற்றது. அவற்றில் நம் கல்லூரி சார்பில் 6 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**03.03.2017** அன்று நம் கல்லூரியில் தமிழ்த்துறை சார்பில் **மாணவர்கள் பட்டிமன்றம் "மின்னனு பண பரிமாற்றத்தினால் வீட்டுக்கும் நாட்டுக்கும் நன்மை, தீமை"** என்ற தலைப்பில் நடைப்பெற்றது.